# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

**No:** 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org

**வட மாகாணசபை தேர்தல் 2013 –**

**அறிக்கை இல.8**

**செப்டெம்பர் 21, 2013: நண்பகல் 12.00 மணி**

காலை 7.00 மணிக்கு தேர்தல் ஆரம்பித்ததிலிருந்து தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள் மீதான தாக்குதல், அச்சுறுத்துதல், வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகாமையில் பிரச்சாரங்களை மேற்கொள்ளல் மற்றும் உணவுப் பொருட்களை விநியோகித்தலும் மற்றும் ஆதரவு திரட்டுதல் உட்பட பல எண்ணிக்கையான சம்பவங்களின் முறைப்பாடுகளை தே.வ.க.நி கிடைக்கப் பெற்றது. நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் ஒரு மிதமான வாக்காளர் வாக்குப்பதிவுகள் நடைபெற்றிருந்தன. எவ்வாறாயினும், முல்லைத்தீவு மாவட்டம் உட்பட, ஏனைய பிரதேசங்களில் குறைந்தளவிலான வாக்குப் பதிவு வீதமே பதிவு செய்யப்பட்டதாகவும் தே.வ.க.நி அறிக்கைகளைப் பெற்றுள்ளது. இந்தப் பிரதேசங்களில் வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களை அடைவதற்கு 22 கி.மீ வரையான ஒரு கணிசமான தூரம் பிரயாணிக்க வேண்டியிருந்தது. போக்குவரத்து இலவசமாக வழங்கப்படும் என உறுதியளித்திருந்த தேர்தல்கள் ஆணையபளரிடம் இந்தப் பிரச்சினையை நாங்கள் எழுப்பினோம். ஆனாலும் பகல் 12 மணியளவு வரை மிகவும் போக்குவரத்து மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது அல்லது இல்லாதிருந்தது. ஐ.ம.சு.கூ அரசியல்வாதிகள் மற்றும் இராணுவத்தால் வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்ட குறித்த சம்பவங்கள் இந்த இடங்களில் வாக்காளர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது.

தேர்தல் தினமான, செப்டெம்பர் 21 அன்று, தே.வ.க.நி 240 தேர்தல்கள் கண்காணிப்பாளர்களை தனிப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் ஈடுபடுத்தியதிற்கு மேலாக 17 கள கண்காணிப்பாளர்களையும் மற்றும் 8 நடமாடும் பிரிவுகளையும் சேவையிலீடுபடுத்தியது. தே.வ.க.நி இன் அனைத்து அறிக்கைகள் மற்றும் செய்தி அறிக்கைகள் மற்றும் சம்பவங்களின் கூகிள் வரைபடங்கள் என்பன http://cmev.wordpress.com எனும் தொடரறா இணைப்பில் அணுகப்பட முடியும்.

தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைக்கு எதிரான கூட்டு என்பவற்றால் 1997 இல், தேர்தல் தொடர்பான வன்முறையைக் கண்காணிப்பதற்காக, ஓர் சுயாதீன மற்றும் கட்சிச்சார்பற்ற ஸ்தாபனமாக உருவாக்கப்பட்டது. தற்போது தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் (INFORM) மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் என்பவற்றால் ஆக்கப்பட்டுள்ளது.

**சில முக்கியமான சம்பவங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:**

**வடமாகாணம், இல.50, கொக்குபட்டயம் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை சிலாவத்துறை வாக்களிப்பு நிலையம், மன்னார் தேர்தல் தொகுதி, மன்னார் மாவட்டம்**

தே.வ.க.நி இன் நடமாடும் கண்காணிப்பாளர் அறிவித்தபடி, மன்னார் மாவட்டத்தில் இல 01 இல் போட்டியிடும் எங்கள் தேசக் கட்சி வேட்பாளர். அப்துல் சலாம் மொகமட் ஹில்மி வாக்களிப்பு நிலைய இல.50, கொக்குப்பட்டயம் ரோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை வாயில் அருகே காலை 10.30 அளவில் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் பாதுகாவலர்களால் தாக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது. பாதிக்கப்பட்டவர் காலை 11.05 அளவில் சிலாவத்துறை பொலிஸில் முறைப்பாடொன்றை (CIB-104-84) பதிவு செய்தார். இந்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சம்பவம் பற்றி புலன்விசாரணை செய்கிறார். பாதிக்கப்பட்டவர் சிகிச்சைக்காக பேசாலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

## அச்சுறுத்தல் மற்றும் மிரட்டுதல்

## இல.9 சின்னப்பூவரசங்குளம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையம், வவுனியா மாவட்டம், வவுனியா தேர்தல் தொகுதி

வவுனியா மாவட்டத்திலுள்ள சின்னப்பூவரசங்குளம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலைய இல.9 இற்கு காலை 9.04 அளவில் இரண்டு நபர்கள் பதிவிலக்கம் NP HS 7187 ஐக் கொண்ட மோட்டார் சைக்கிளில் வந்ததுடன் வாக்களிப்பு நிலையத்துக்கு முன்னாள் நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தனர். குறித்த வாக்களிப்பு நிலையத்துக்கு தாங்கள் வாக்களிப்பதற்காக வந்ததாக அப்பகுதி இளைஞர்கள் உறுதிப்படுத்தினர். ஆனாலும், இந்த இரண்டு நபர்களையும் இராணுவ வீரர்களாக அவர்கள் இனங் கண்டு கொண்டதால் வாக்களிப்பதற்கு செல்லவில்லை. இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக நிலைமை இதே போக்கைக் கொண்டிருந்ததுடன், வாக்களிப்பு நிலையத்துக்கு வந்த பலரும் தங்கள் வாக்குகளை அளிக்காமல் திரும்பிச் சென்றனர்.

### இல.42 தம்படி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை (அ.த.க.பா) வாக்களிப்பு நிலையம், யாழ்ப்பாண மாவட்டம், ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் டானியல் ரெக்சின் (ரஜிப்) ஒரு மக்கள் கூட்டத்துடன் (அவர்கள் கிராமத்திலிருந்தானவர்கள் அல்ல) கிராமத்துக்கு வந்து மக்களை அச்சுறுத்தியும் மிரட்டுவதாகவும் தம்படிக் கிராமத்தி லிருந்தான கிராமத்தவர்கள் தே.வ.க.நி இற்கு முறைப்பாடு செய்தனர். வாக்களிக்க வேண்டாமென சமூகத் தலைவர்கள், மதத் தலைவர்கள் மற்றும் கிராமத் தலைவர்கள் கூறப்பட்டதுடன் இந்த செய்தியை கிராமத்திலுள்ள ஏனையவர்களுக்கும் தெரிவிக்கும்படி அவர்கள் கூறப்பட்டனர். பதிவிலக்கம் NP-VK 9353 ஐ கொண்டுள்ள ஒரு மோட்டார் சைக்கிள் தம்படிக் கிராமப் பகுதிகளில் சுற்றித் திரிவதைக் கண்டதாக கிராமத்திலுள்ள மக்கள் முறையிட்டனர். பிரதேச சபை தவிசாளர் டானியல் ரெக்சின் தங்களை அச்சுறுத்தியதாகவும் மக்கள் தே.வ.க.நி இற்கு முறையிட்டனர்.

தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலைய இல.42, தம்படி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் காலை 9.30 இலிருந்து 10.00 மணி வரை நின்றனர். தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலையத்தில் பிரசன்னமாகியிருக்கும் வரை நிலைமைகள் அமைதியாக இருந்தன. தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலையத்தை விட்டு அகன்று சென்ற உடனேயே 10.05 அளவில் பிரதேச சபைத் தவிசாளரும் மற்றும் அவரது குழுவினரும் பொதுமக்களை அச்சுறுத்தத் தொடங்கியதாக அவர்கள் முறைப்பாடுகளைப் பெற்றனர். தம்படிக் கிராமத்திலுள்ள 758 வாக்காளர்களில் இந் நேரம் வரை 70 வாக்காளர்கள் மட்டுமே தங்களது வாக்குகளை அளித்துள்ளனர்.

### இல.4, 5, 6, 7 வாக்களிப்பு நிலையங்கள், யாழ்ப்பாண மாவட்டம், வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்கள் 4, 5, 6, 7 என்பவற்றை அண்மித்த பகுதிகளில் காலை 7.15 இலிருந்து யா/காரைநகர் யாழ்ரன் கல்லூரி (மண்டப இல.1) ; இல.5 யா/ காரைநகர் யாழ்ரன் கல்லூரி (கனிஷ்ட பிரிவு மண்டப இல.2); இல.6 யா/ காரைநகர் யாழ்ரன் கல்லூரி (மண்டப இல:2) மற்றும் வாக்களிப்பு நிலையம் 7 யா/காரைநகர் யாழ்ரன் கல்லூரி (மண்டப இல.3) இல்4 இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினைச் சேர்ந்தவர்களென சந்தேகிக்கப்படும் சாதாரண உடை உடுத்தியவர்களால் வாக்களிப்பு நிலையங்களுக்குள் மக்கள் உட்புகுவது தடுக்கப்பட்டது, என காரைநகரிலுள்ள பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர்.

### தேர்தல் தொடர்பான ஏனைய குற்றங்கள்

### இல.16 உடையார்கட்டு மகா வித்தியாலயம் வாக்களிப்பு நிலையம், முல்லைத் தீவு மாவட்டம், முல்லைத்தீவு தேர்தல் தொகுதி

வாக்களிப்பு நிலைய இல.16, உடையார்கட்டு மகா வித்தியாலயத்துக்கு நேரெதிரே இலக்கம் 8 ஐக் கொண்ட ஸ்டிக்கர்கள் ஒட்டிய இரண்டு வாகனங்கள் ( ஜாகுவார் ரக வாகனம் பதிவிலக்கம் 301 – 2996 மற்றும் ஹை ஏஸ் வான் பதிவிலக்கம் 59-1143) நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக தே.வ.க.நி கண்காணிப்பாளர் அறிவித்தார். முல்லைத்தீவு மாவட்ட த்தில் இல.8 இன் கீழ் போட்டியிடும் ஐ.ம.சு.கூ வேட்பாளர் ஸ்ரீஸ்கந்தராஜா அருள் ஜெனிபொட்டின் ஆதரவாளர்கள் இல.8 க்கு எதிராக புள்ளடி அடையாளம் இட்ட அட்டைகளை வெளிப்படையாகவே விநியோகித்தனர். இந்த சம்பவம் பொலிஸின் பிரசன்னத்துடன் காலை 11.00 மணியளவில் நடைபெற்றது.

**இல.22 ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் வாக்களிப்பு நிலையம், முல்லைத்தீவு மாவட்டம், முல்லைத்தீவு தேர்தல் தொகுதி**

பெரிய சலம்பனிலிருந்து (வாக்களிப்பு நிலையத்திலிருந்து 3 கி.மீ தொலைவிலானது) ஒட்டுசுட்டான இந்து தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலைய இல.22 க்கு வாக்காளர்களை காலை 11.00 மணியளவில் உத்தியோகபூர்வமற்ற வகையில் போக்குவரத்துச் செய்ததை தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் அவதானித்தனர். பஸ் வண்டி தரித்து நின்ற இடத்திலிருந்து இல.3 இன் கீழ் போட்டியிடும் முல்லைத்தீவு மாவட்ட ஐ.ம.சு.கூ வேட்பாளர் ஏ.சிவலிங்கம் சதீஷ் குமாரின் அட்டைகளை தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் கண்டெடுத்தனர்.

**இல.8 மல்லாவி மத்திய கல்லூரி வாக்களிப்பு நிலையம், முல்லைத்தீவு மாவட்டம், முல்லைத்தீவு தேர்தல் தொகுதி**

தே.வ.க.நி இன் கண்காணிப்பாளர் அறிவித்தவாறு, காலை 11.05 அளவில் முன்னாள் த.வி.பு போராளிகளுக்கான புனர்வாழ்வு மையங்களிலுள்ளவர்கள் மல்லாவி மத்திய கல்லூரிக்கருகே ஒன்றுகூடி ஐ.ம.சு.கூ க்கு வாக்களிக்கும்படி பிரச்சாரங்களில் ஈடுபட்டிருந்தனர்.

**இல.15,16,17,18 வாக்களிப்பு நிலையங்கள், யாழ்ப்பாண மாவட்டம்,உடுப்பிட்டி தேர்தல் தொகுதி**

காலை 11.45 அளவில், த.தே.கூ ஆதரவாளர்கள் வாக்களிப்பு நிலையங்கள் இல.15 மற்றும் 16 யா/ வல்வை சிவகுரு வித்தியாலய மண்டம் 1 மற்றும் 2, வாக்களிப்பு நிலையம் இல.17 மற்றும் 18 வல்வை மகளிர் மகா வித்தியாலய மண்டப இல 1 மற்றும் 2 மற்றும் வாக்களிப்பு நிலைய இல.19, வல்வை அமெரிக்கன் மிஷன் தமிழ் பாடசாலை என்பவற்றுக்கு வாக்களிக்க வந்த வாக்காளர்களுக்கு சாராயமும் மற்றும் சிகரெட்டும் வழங்கி த.தே.கூ இற்கு அவர்களது வாக்குகளை அளிப்பதற்கு வேண்டிக் கொண்டனர் என தே.வ.க.நி கண்காணிப்பாளார் முறையிடுகிறார்.

**இல.8, மன்னார் கரிசல் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையம், மன்னார் மாவட்டம், மன்னார் தேர்தல் தொகுதி**

பிரதேசத்திலுள்ள தே.வ.க.நி கண்காணிப்பாளரால் அறிவிக்கப்பட்டவாறு, காலை 6.25 இலிருந்து மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார் கரிசல் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள கரிசல் முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அருகே, ஐ.ம.சு.கூ சேர்ந்த ஆதரவாளர்களின் ஒரு குழுவினர் மாட்டிறைச்சி மற்றும் ஏனைய உணவுப் பொருட்களை அப்பகுதியிலிருந்த மக்களுக்கு விநியோகித்த அதே வேளை ஐ.ம.சு.கூ இன் வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து ஒரு பொது அறிவிப்பு செய்யும் முறை மூலமாக அறிவிப்பு செய்யப்பட்டது.

**இல.9. மன்னார் புதுக்குடியிருப்பு அரசாங்க முஸ்லிம் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையம், மன்னார் மாவட்டம், மன்னார் தேர்தல் தொகுதி**

தே.வ.க.நி கண்காணிப்பாளரால் அறிவிக்கப்பட்டவாறு காலை 6.00 மணியிலிருந்து ஐ.ம.சு.கூ ஆதரவாளர்கள், தங்களது வாக்குகளை அளிப்பதற்காக மன்னார் புதுக்குடியிருப்பு அரசாங்க முஸ்லிம் பாடசாலை வாக்களிப்பு நிலையத்துக்கு போவதற்கு இருந்த மக்கள் மத்தியில் உலர் உணவுகளை விநியோகித்தனர். அவற்றை விநியோகித்துக் கொண்டிருந்த ஆதே வேளை அவர்கள் வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களிப்பதற்கு கேட்டுக் கொண்டிருந்தனர்.

**இல.47 மன்னார்/ அரிப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையம், மன்னார் மாவட்டம், மன்னார் தேர்தல் தொகுதி .**

காலை 8.10 அளவில், சுமார் 50 பேர்களைக் கொண்ட ஒரு குழுவினர் மன்னார்/அரிப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வாயில் (வாக்களிப்பு நிலைய இல.47) அருகே ஒன்று கூடியிருந்ததை தே.வ.க.நி அவதானித்தனர். ஒரு பொலிஸ் அணி வாக்களிப்பு நிலையத்துக்கு வந்து கூடியிருந்தவர்களை கலைத்ததையும் தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் அவதானித்தனர். அரிப்பு உப தபால்நிலையத்தில் “த.தே.கூ தமிழர்களின் விருப்பாகும்” எனக் குறிப்பிடும் சுவரொட்டிகளை தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்கள் அவதானித்தனர். வாக்களிப்பு நிலையத்துக்கு அருகாமையில் “தமிழர்களே விழித்தெழுங்கள்” எனும் சுவரொட்டிகள் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்தன.

த.தே.கூ இன் வேட்பாளர்கள் இல.5, திரு.கிறிஸ்தோத்திரம் விமலசேகரம் மற்றும் வேட்பாளர் இல.1, திரு.அந்தனி சூசைரத்னம் பிறிமஸ் சிராய்வா ஆகியொரின் சுவரொட்டிகள் தபால் நிலையத்திற்கு அருகிலுள்ள மதிற் சுவரில் ஒட்டப்பட்டிருந்ததை தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் அவதானித்தனர்.

**இல.31, முல்லைத்தீவு/ கிரிலபான் வெவ வித்தியாலயம் வாக்களிப்பு நிலையம், முல்லைத்தீவு மாவட்டம், முல்லைத்தீவு தேர்தல் தொகுதி**

காலை 9.20 மணியளவில் 56-0694 எனும் வாகனப் பதிவிலக்கத்தைக் கொண்ட வான் வாக்களிப்பு நிலையத்துக்கு ஆட்களைப் போக்குவரத்து செய்ததை தே.வ.க.நி கண்காணிப்பாளர் அவதானித்தார். வாக்களிப்பு நிலையத்திலிருந்து சுமார் 200 மீற்றர்கள் தொலைவில் சுமார் 100 அல்லது மேற்பட்ட ஆட்கள் கூடியிருந்ததையும் மற்றும் சுமார் 15 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வேறு சில வாகனங்கள் அந்தப் பகுதியைச் சுற்றி நிறுத்தி வைத்திருந்ததையும் தே.வ.க.நி கண்காணிப்பாளர் அவதானித்தார். வாக்களிப்பு நிலையத்திலிருந்து சுமார் 200 மீற்றர்கள் தள்ளி வீடொன்றில் ஆளொருவர் மேசையொன்றைப் போட்டு சில வகையான பட்டியலைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்ததையும் கண்காணிப்பாளர் அவதானித்தார்.

**இல.33 மன்னார்/மாவிளங்கேணி ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை முருங்கன் வாக்களிப்பு நிலையம், மன்னார் மாவட்டம், மன்னார் தேர்தல் தொகுதி**

பதிவிலக்கம் 56-3493 ஐ கொண்ட வான் வாக்காளர்களை இல.33, மன்னார்/மாவிளங்கேணி ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, முருங்கன் இற்கு போக்குவரத்து செய்ததை தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் அவதானித்தனர். வானில் மன்னார் மாவட்டத்தின் ஐ.ம.சு.கூ வேட்பாளர் இல.4 திரு.அபாஸ் அப்துல் ரிஃப்கானின் சுவரொட்டிகளால் ஒட்டி நிரப்பப்பட்டிருந்தது.

**இல.4. நடுக்கண்டல் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையம், முல்லைத்தீவு மாவட்டம், முல்லைத்தீவு தேர்தல் தொகுதி**

நடுக்கண்டல் அரசாங்கத் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து 3 கி.மீ இற்கிடையில் 2 தனியார் பஸ் வண்டிகள் தனிப்பட்ட சேவையிலீடுபடக் காணப்பட்டதாக தே.வ.க.நி அறிவிக்கிறார். தேர்தல் ஆணையாளரால் வாக்குறுதியளித்தபடி மூன்றுமுறிப்பிலிருந்து (10கி.மீ தள்ளி) வாக்களிப்பு நிலையத்திற்கு பஸ் வண்டி எதுவும் வந்ததாக காணப்படவில்லை என தே.வ.க.நி கண்காணிப்பாளர் அவதானித்தார். இதனால், பஸ் சேவை இல்லாததினால் குறைந்தளவிலான வாக்காளர்களே வாக்களிப்பதற்கு வந்தனர். மூன்றுமுறிப்பில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 548 பேர்கள் உள்ளனர். தே.வ.க.நி கண்காணிப்பாளர் அறிவித்ததின் படி, பகல் 12.00 மணியளவில் 10% க்கும் குறைவான வாக்காளர்களே தங்களது வாக்குகளை அளித்திருந்தனர்.

**தேர்தலுக்கு முன்னதான சம்பவங்கள்**

**கிளிநொச்சி மாவட்டம், கிளிநொச்சி தேர்தல் தொகுதி/கிளநொச்சி நகரம் த.தே.கூ பிரதான ஏற்பாட்டாளர் ஶ்ரீதரனின் கட்சி அலுவலகம்**

செப்டெம்பர் 20ஆம் திகதி, கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதான ஏற்பாட்டாளர் ஶ்ரீதரனின் கட்சி அலுவலகம் இரவு 10.30 அளவில் சீருடையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட, இனந்தெரியாத பெருமளவிலான ஆட்களால் சுற்றி வளைக்கப்பட்டது. அவர்கள் அங்கு நீண்ட நேரம் தரித்து நின்றதோடு, அதன் மூலம் அங்கிருந்த ஆட்கள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுவதை உணர்த்த விரும்பினர். சுமார் 15 த.தே.கூ ஆதரவாளர்கள் அந்த சமயத்தில் அலுவலகத்தில் இருந்துள்ளனர். இந்த சம்பவம் பொலிஸ் அவசர சேவைப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான எநத நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இரவு சுமார் 1 1.15 அளவில் தே.வ.க.நி நடமாடும் அணி ஸ்தலத்துக்கு வந்ததும் கூட்டத்தினர் கலைந்து சென்றனர். தே.வ.க.நி அவரது அலுவலக்தை சுற்றி வளைத்தது யார் என அவர் சந்தேகிக்கிறார் என திரு.ஶ்ரீதரனிடமிருந்து கேட்டபோது சந்தேக நபர்கள் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் சேர்ந்த என அவர் பதிலிறுத்தார்.

| | | |
|---|---|---|
| கலாநிதி பா.சரவணமுத்து | சுனில் ஜயசேகர | உதய கலுபதிரண |
| இணை-அழைப்பாளர் | இணை-அழைப்பாளர் | இணை-அழைப்பாளர் |